# நகராட்சி நிருவாகத் துறை

## மானியக் கோரிக்கை எண்.34

**அறிவிப்புகள்– 2021 –2022**

34) திருவாரூர் மாவட்டம், நன்னிலம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, கோட்டூர், திருவாரூர், கொராடச்சேரி ஆகிய 6 ஒன்றியங்களில் உள்ள 665 ஊரக குடியிருப்புகளுக்கு கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்டு ரூ.880 கோடி மதிப்பீட்டில் கூட்டுக்குடி நீர் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 4 லட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

35) திருவண்ணாமலை மாவட்டத்தின் 4 நகராட்சிகள், 10 பேரூராட்சிகள் மற்றும் 3,973 ஊரக குடியிருப்புகள் மற்றும் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்களுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய இத்திட்டம் காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு ரூ.5800 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 50 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

36) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன் சத்திரம் நகராட்சி மற்றும் திண்டுக்கல், திருப்பூர் மாவட்டங்களைச் சார்ந்த 492 வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்கு ஆழியார் ஆற்றை நீராதாரமாகக் கொண்டு ரூ.600 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 5.25 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

37) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, வாடிப்பட்டி, அலங்காநல்லூர், செல்லம்பட்டி, திருமங்கலம் மற்றும் கள்ளிக்குடி ஒன்றியங்களில் உள்ள 795 ஊரகக் குடியிருப்புகளுக்கு வைகை அணையினை நீராதாரமாகக் கொண்டு ரூ.660 கோடி திட்ட மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 6 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

38) இராணிப்பேட்டை மாவட்டம், காவேரிப்பாக்கம் ஒன்றியத்திலுள்ள செம்பேடு மற்றும் 88 ஊரக குடியிருப்புகளுக்கு பாலாறு ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு ரூ.39 கோடி மதிப்பீட்டில் கூட்டு குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 54,000 மக்கள் பயன்பெறுவார்கள்.

39) மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 32 ஊரக குடியிருப்புகளுக்கு கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்டு ரூ.31 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 15,000 மக்கள் பயன்பெறுவார்கள்.

40) கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சி மற்றும் அண்ணாமலை நகர் பேரூராட்சிக்கு கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு ரூ.127 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 86,000 மக்கள் பயன்பெறுவர்.

41) திருச்சி மாவட்டம் மணிகண்டம் ஒன்றியத்திலுள்ள 146 ஊரக குடியிருப்புகள், முசிறி, மண்ணச்சநல்லூர் ஒன்றியங்களிலுள்ள கூடப்பள்ளி மற்றும் 129 ஊரக குடியிருப்புகள், தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர், திருவையாறு மற்றும் தஞ்சாவூர் ஒன்றியங்களிலுள்ள 164 ஊரக குடியிருப்புகளிலுள்ள 3.21 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியத்தில் உள்ள 434 ஊரகக் குடியிருப்புகளைச் சார்ந்த 1.45 இலட்சம் மக்கள்

பயன்பெறும் வகையிலும், தென்காசி மாவட்டம், தென்காசி நகராட்சி, தென்காசி, செங்கோட்டை மற்றும் கடையநல்லூர் ஒன்றியங்களில் உள்ள 78 ஊரக குடியிருப்புகளைச் சார்ந்த 2.67 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலும், கூட்டுக்குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்திலுள்ள சுமார் 1.10 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலும், நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருமருகல், கீழையூர், தலைஞாயிறு, கீழ்வேளூர் மற்றும் நாகப்பட்டினம் ஒன்றியங்களில் உள்ள 749 ஊரக குடியிருப்புகள், நாகப்பட்டினம் நகராட்சி, கீழ்வேளூர் மற்றும் வேளாங்கண்ணி பேரூராட்சிகளைச் சார்ந்த 5.14 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலும் கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மேலும், இராமநாதபுரம் மாவட்டம் நரிப்பையூரில், கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் அமைத்து கமுதி மற்றும் கடலாடி ஒன்றியங்களில் உள்ள 138 ஊரக குடியிருப்புகளைச் சார்ந்த 64,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக்குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

42) இவ்வாறு மகத்தான பணிகளை ஆற்றி வரும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயல்திறனை மேம்படுத்தும் வகையில், பணியாளர்களின் பற்றாக்குறையை சரிசெய்ய காலிப் பணியிடங்கள் தேவைக்கேற்ப, நிரப்பப்படும்.

43) 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகர்ப்புர மக்கள் தொகை 48.45 சதவீதம் ஆகும். 2021–ஆம்